සියලුම හිමිකම් ඇවිරිණි/ முழுப் பதிப்புரிமையுடையது / All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
**Provincial Department of Education - NWP**

தரம் 09 | முதலாம் தவணைப் பரீட்சை - 2019 | 22 T

சுட்டெண் ......................................

# தமிழ் மொழியும் இலக்கியமும்

நேரம் 2 மணித்தியாலம்

## பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **மிகப் பொருத்தமான விடையினை தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

01. உன் மிடுக்கான பேச்சை உன்னிடமே வைத்துக்கொள். இங்கு மிடுக்கு என்பதன் ஒத்த சொல்,
 1. ஆசை 2. கோபம் 3. செருக்கு, அகந்தை 4. இகழ்ச்சி

02. அக்கனவை மறந்துவிடமாட்டாயா?. கனவு என்பதன் எதிர்கருத்துச் சொல்,
 1. நனவு 2. நினைவு 3. மறதி 4. ஞாபகம்

03. வெற்றி எனக்குத்தான் என்று மகன் கூறினான். மகன் என்பதன் எதிர்பாற் சொல்,
 1. சேய் 2. குழந்தை 3. மகள் 4. சிறுவன்

04. உரம், வல்லமை, வலிமை, சக்தி ஆகிய சொற்களைக் குறிக்கும் ஒரு சொல்,
 1. தவறு 2. ஆற்றல் 3. ஆரம் 4. முயற்சி

05. கண்ணாய் இருத்தல் என்பதற்குப் பொருத்தமான சொல்,
 1. கண்ணைப் போல் இருத்தல். 2. கண்ணால் பார்த்தல்.
 3. கலனமின்றி இருத்தல். 4. அக்கறை செலுத்துதல்.

06. பார்வதியின் புத்தகம் கிழிந்தது. இவ்வாக்கியத்தின் எழுவாய்,
 1. கிழிந்தது. 2. புத்தகம் 3. பார்வதி 4. அவள்

07. அவன் ஆடி அசைந்து வந்தான். ஆடி அசைந்து என்பதன் பொருள்,
 1. சந்தோஷமாக 2. மிக மெதுவாக 3. வேகமாக 4. அமைதியாக

08. ஆடு மேய்ப்பவன் இடையன் என்பது போல குதிரை செலுத்துபவன்,
 1. ஆயன் 2. வலவன் 3. பாகன் 4. மாலுமி

09. பின்வருவனவற்றுள் ஆக்கப் பெயராக அமையாத சொல்,
 1. வானொலி 2. விருந்தாளி 3. அறிவாளி 4. முதலாளி

10. அம்மா ஆடையை கழுவினாள். இங்கு இடம்பெற்றுள்ள உருபு,
 1. யை 2. ஐ 3. கழுவு 4. ஆல்

11. Emotion (எமோசன்) என்ற கலைச்சொல்லின் தமிழ் வடிவம்,
 1. கோபம் 2. பொறாமை 3. திறமை 4. உணர்ச்சி

12. நட்போடு, நயமாக இங்கு முதலெழுத்துக்கள் ஒன்றித்து வருவது,
 1. எதுகை 2. மோனை 3. சிலேடை 4. உருவகம்

13. தம் அருமை மைந்தனை அழைத்தார். இவ்வாக்கியத்திலுள்ள செயப்படு பொருள்,
 1. அழைத்தார் 2. அருமை 3. மைந்தனை 4. அவர்

14. “கடற்கன்னி” என்பது எவ்வகை விகாரம் பெற்ற புணர்ச்சி,
 1. தோன்றல் 2. கெடுதல் 3. இயல்பு 4. திரிதல்

15. தூங்குதல் என்ற பொருள் தரும் மரபுத் தொடர்,
 1. நித்திரை செய்தல் 2. கண் வளர்தல் 3. கண்மலர்தல் 4. கண்ணெறிதல்

16. மான்கள் கூட்டமாக நின்றன. இவ்வாக்கியம்,
1. கூட்டு வாக்கியம் 2. தனிவாக்கியம் 3. கலப்பு வாக்கியம் 4. கூற்று வாக்கியம்

17. "வதன மதி பூத்த பூங்குவளை" எனும் பாடலடியில் கையாளப்பட்ட அணி யாது?
1. உருவகம் 2. உவமை 3. சிலேடை 4. உயர்வு நவிற்சி

18. இளமையாக இருக்க முயன்று முதமையை வரவழைத்துக் கொள்கிறார்கள். என்ற கூற்றுக்குப் பொருத்தமான பழமொழி,
1. இக்கரைக்கு அக்கரை பச்சை 2. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
3. உப்பிட்டவரை உள்ளளவும் நினை 4. குளிக்கப் போய் சேற்றைப் பூசிக் கொள்வது

19. நான் அன்று மிக உணர்ச்சிவசப்பட்டு விட்டோம். இது எவ்வகை வழுவைச் சேர்ந்தது,
1. எண்வழு 2. கால வழு 3. இடவலு 4. மூன்றும் சரியானது.

20. ஒழுங்கற்றுக் காணப்படும் வாக்கியங்களை பொருள் தரக்கூடிய பந்தியாக அமைப்பதற்கு மிகப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.
(அ) இரண்டு திருவடிச் சுவடுகள் அங்கேயுள்ளன.
(ஆ) அந்தக் கோபுரம் மிகவும் சிறியது.
(இ) மலையுச்சியில் முடிபோல ஒரு கோபுரம் வகுக்கப்பட்டுள்ளது.
(ஈ) ஏறக்குறைய நூற்றைம்பது பேரைக் கொள்ளக் கூடியது.
(உ) அவற்றை நான்கு மதத்தவரும் போற்றி வழிபடுகின்றனர்.

1. ஈ, அ, இ, உ, ஆ 2. இ, ஆ, அ, உ, ஈ 3. இ, ஈ, உ, ஆ, அ 4. இ, ஆ, ஈ, அ, உ

(2x20=40புள்ளிகள்)

## பகுதி II

- **முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

(01) பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து 200 சொற்களுக்குக் குறையாது கட்டுரை ஒன்று எழுதுக.

1. வாசிப்பதன் முக்கியத்துவம்
2. தொலைக்காட்சியின் நன்மை, தீமை பற்றி இருவருக்கிடையில் நடைபெறும் உரையாடல்.
3. மழைக்காட்சி (வருணனை)
4. நான் ஒரு விஞ்ஞானியானால்....

(20 புள்ளிகள்)

(02) பின்வரும் இரண்டு வினாக்களுள் ஒன்றை மாத்திரம் தெரிவு செய்து எழுதுக.

1. உமது பாடசாலையில் நடைப்பெற்ற இல்ல விளையாட்டுப் போட்டி, பற்றி நண்பனுக்கு ஒரு கடிதம் வரைக.

அல்லது

2. உமது நண்பன் அல்லது நண்பியின் பிறந்த தினத்தை வாழ்த்தி ஒரு வாழ்த்தட்டையை வடிவமைக்குக.

(10 புள்ளிகள்)

(03) பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

கல்லும் மலையும் குதித்து வந்தேன்
காடும் செடியும் கடந்து வந்தேன்
எல்லை விரிந்த சமவெளி எங்கும் - நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்.

காணும் நிழத்தழல் ஆற்றிவந்தேன் - அதில்
கண் குளிரப் பயிர் கண்டு வந்தேன்
ஆயம் மலர்ப்பொழில் செய்து வந்தேன் - அங்கென்
ஆசை தீர விளையாடி வந்தேன்.

1. இக்கவிதையில் தன் கதையைச் சொல்பவன் யார்?
2. இது வந்த பாதையில் சந்தித்தவற்றில் 2 எழுதுக.
3. ஆசை தீர விளையாடிய இடம் எது?
4. "கண்குளிரப் பயிர் கண்டு வந்தேன்" என்பதில் வந்த செயப்படு பொருள் எது?
5. பின்வரும் சொற்களுக்குரிய ஒத்த பொருளை தருக.
   1. மலை
   2. தழல்
   3. மலர்
   4. பொழில்

(10 புள்ளிகள்)

(04) பின்வரும் சொற்களைக் கொண்டு கருத்துப்புலப்பட வாக்கியம் அமைக்குக.

1. நகை
2. மதி
3. அரி
4. அடி
5. படி

(10 புள்ளிகள்)

(05) பாடநூல்களைத் துணையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.

1. பிரச்சினைகளைக் கண்டு வருந்துவதால் நிகழ்பவை யாவை?
2. இதயம் அழுகிறது என்ற கவிதையில் வரும் மாணவன் சோர்வாக இருந்தமைக்குக் காரணம் யாது?
3. "நிலமை இவ்வளவு தூரத்துக்கு வந்துட்டதா? நல்ல வேளை தப்பினேன்" இது, யாரால், யாருக்குக் கூறப்பட்டது?
4. "இஞ்சை பாருங்கப்பா, இது என்னர அம்பைக் கடிக்குது" இப்பேச்சு வழக்குச் சொற்களை நியம வடிவில் எழுதுக.
5. யார் சிறந்தவர் என்ற உரையாடலில் வந்த பாத்திரங்கள் எவை?

(10 புள்ளிகள்)

(06) பின்வரும் சொற்களை புணர்த்தி எழுதுக.

1. வான் + ஒளி
2. காலம் + நிலை
3. சமையல் + அறை
4. தினம் + குறிப்பு
5. மரம் + பலகை

(10 புள்ளிகள்)

(07)
1. பந்தியை விரித்து வளர்ப்பதற்கான வழிமுறைகள் 4 தருக.
2. தன்வினை வாக்கியங்கள் 3 தருக.
3. பிறவினை விகுதிகள் எவை?

(10 புள்ளிகள்)

**வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்**
**முதலாம் தவணைப் பரீட்சை - 2019**
**தரம் 09 - தமிழ் மொழியும் இலக்கியமும்**
**விடைப்பத்திரம்**

**பகுதி I**

| வினா இல. | விடை | வினா இல. | விடை | வினா இல. | விடை | வினா இல. | விடை |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 3 | 06 | 2 | 11 | 4 | 16 | 2 |
| 02 | 1 | 07 | 2 | 12 | 2 | 17 | 1 |
| 03 | 3 | 08 | 3 | 13 | 3 | 18 | 4 |
| 04 | 2 | 09 | 1 | 14 | 4 | 19 | 1 |
| 05 | 4 | 10 | 2 | 15 | 2 | 20 | 4 |

**பகுதி II**

| வினா இல. | | | விடை | புள்ளி |
|---|---|---|---|---|
| 01. | | | கட்டுரை | |
| | | | பொருளளவு/ விடயப் பொருத்தப்பாடு | 10 |
| | | | கருத்து வெளிப்பாடும், மொழிச் செம்மையும் | 06 |
| | | | எழுத்து நுட்பம் | 04 |
| | | | | 20 |
| 02. | | | கடிதம் | |
| | | | அமைப்பு | 03 |
| | | | விடயப் பொருத்தம் | 05 |
| | | | மொழிநடை | 02 |
| | | | | 10 |
| 03. | 1. | | ஆறு/ நதி | |
| | 2. | | பொருத்தமான விடை | |
| | 3. | | மலர் பொழில்/ பூஞ்சோலையில் | |
| | 4. | | பயிர் | |
| | 5. | | மலை - வரை, அழல் - நெருப்பு, மலர் - பூ, புஷ்பம், பொழில் - சோலை | |
| | | | | 10 |
| 04. | | | பொருத்தமான வாக்கியங்கள் | |
| | | | | 10 |
| 05. | 1. | | நமக்கு நாமே தண்டனையளித்துக் கொள்கிறோம். | |
| | 2. | | சுகயீனமுற்றிருந்த தந்தையை அன்று வைத்தியசாலையில் சேர்த்து விட்டு, பசியோடு வந்தமை. | |
| | 3. | | மருமகளால், தனக்குத்தானே | |
| | 4. | | இங்கே பாருங்கள் இது என்னுடைய அம்பை கடிக்கிறது. | |
| | 5. | | ரோஜா, மல்லிகை, கனகாம்பரம், ரமணி, ஜானகியம்மாள் | |
| | | | | 10 |
| 06. | 1. | | வானொலி | |
| | 2. | | காலநிலை | |
| | 3. | | சமையலறை | |
| | 4. | | தினக்குறிப்பு | |
| | 5. | | மரப்பலகை | |
| | | | | 10 |
| 07. | 1. | | விபரங்கள் தந்து விரித்தல், உதாரணம் காட்டி விரித்தல், நியாயங் கூறி விரித்தல், விளக்கங் கூறி விரித்தல். (பாடப்புத்தகத்தைப் பார்க்குக) | |
| | 2. | | பொருத்தமான விடை | |
| | 3. | | வி.பி | 10 |